திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: தலைவரவர்களே, ஒவ்வொரு பெரிய ஸ்தாபனங்களிலும் அவர்கள் சிப்பந்திகள் வேலையில் இருக்கும்போது விபத்துக்குள்ளானால் அவர்களுக்கு உடனடியாக ஏதாவது கொடுக்கும்படி செய்வதற்கு இன்ஷுரன்ஸ் செய்திருக்கிறார்கள். அந்தமாதிரி கார்பரேஷன் இன்ஷுரன்ஸ் செய்திருக்கிறதா? அப்படிச் செய்திருந்தால் அவர்களுடைய 'நியர் ரிலேஷன்சுக்கு' துரிதமாகப் பணம் கிடைக்கும். இல்லை என்றால் இன்ஷுரன்ஸ் செய்து, ஏதாவது வழிமுறை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளின்படி யாராவது பணியில் இருக்கும் போது இறந்துவிட்டால் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்குப் பாதுகாப்பு வைப்பு நிதி (இன்ஷுரன்ஸ் திட்டம்) குடும்ப நலத் திட்டம் இந்த இரண்டுமே அளிக்க இடமில்லை. ஆகையால் இதைப் பரிசீலித்து, இதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

[முற்பகல் 9—40]

கள்ளகொளத்தூர் ஊராட்சி மன்றக் கட்டிடம்

*வினா எண் 51— திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மைலம் பஞ்சாயத்து யூனியன், கள்ளகொளத்தூர் கிராம ஊராட்சி மன்ற கட்டிடத்திற்கு பத்து ஆண்டுக் காலத்திற்கு முன் அடிக்கல் போடப்பட்டிருப்பதை தாமதமின்றி உடனே கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கள்ளகொளத்தூர் ஊராட்சி அலுவலகக் கட்டிடத்தை கட்டி முடிக்க புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வேலை நடைபெறுவதற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். துரிதமாக முடிக்க ஆணையர் பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, 10 ஆண்டுக் காலமாக இந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படாததற்குக் காரணம் என்ன? இது எப்போது கட்டி முடிக்கப்படும்? இதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 10 ஆண்டு காலமாக கட்டி முடிக்காததற்குக் காரணம் முன்னால் இருந்த மன்றத் தலைவர்தான். அவருடைய பெயரை வேண்டுமானால் சொல்கிறேன். அவருடைய பெயர் கிருஷ்ணவேணி பட்டாபி. 1971-72-ல் ரூ. 5,000 மதிப்பீடு செய்து இந்தக்

கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1971-72-ல் இதற்காக செலவிடப்பட்ட தொகை 1,050 ரூபாய். 1972-73-ல் செலவிடப்பட்ட தொகை 2,650 ரூபாய். 3,700 ரூபாய் செலவிட்ட பிறகும் இந்தக் கட்டிடம் அஸ்திவார நிலையிலிருந்து மேலே வரவில்லை. அதற்குக் காரணமாக இருந்தவர் மன்றத் தலைவர் என்று குறிப்புகள் சொல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலே இந்தக் கட்டிடத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று ஆணையருக்கு ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கிறது; உடனடியாகக் கட்டி முடிக்கப்படும்.

தேவணம்பாளையம் செல்ல பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 52—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், தேவணம்பாளையத்திற்கு செல்வதற்கு பாதை வசதி ஏற்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட ஒன்றியத்திலிருந்து நடவடிக்கைக் குறிப்புகள் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாலை அமைக்க வேண்டிய நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுக்க ஒன்றிய ஆணையருக்கும் பெருந்துறை வட்டாட்சியருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, அந்த ஊர் தோன்றிய காலத்திலிருந்து இதுவரையில் அந்த ஊருக்குச் செல்ல வேண்டிய வழி இல்லை. மேலும், கால்நடையாகச் சென்று கொண்டிருந்த அந்த பாதையில்கூட மழை பெய்த காரணத்தால் விதை போட்டு, நடக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதை எல்லாம் பரிசீலனை செய்துதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைரமடை-தொப்பம்பட்டி சாலை.

*வினா எண் 53—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர்-கோவை நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் வைரமடை-தொப்பம்பட்டி சாலையில் தார் போடும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?